2010 மே 6]

(Concession) Rules, *1959*-என்பது AMASAR என்கிற Ancient Monuments and Archaeological Sites and Remains Rules என்ற அந்தத் துறையினுடைய சார்பாக இருக்கக்கூடிய விதிகளுக்கு ஏற்புடையதாக இல்லை. It is not in conformity with AMASAR Rules. எனவே, இந்த நிலையில் அதற்குத் தேவையான திருத்தங்களை உருவாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. நம்முடைய உயர் கல்வித் துறையின் சார்பாக ஒரு குழுவும் அதற்காக அமைக்கப்பட்டு, அத்துறையும் அதை ஆய்வு செய்துகொண்டிருக்கிறது. தேவையான நடவடிக்கைகளை அரசு இந்த விஷயத்தில் உறுதியாக எடுக்கும் என்பதை நான் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

148—

ஆராய்ச்சி மையம்

***62441—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதியில் இரப்பர் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவட்டாறு தொகுதியில் இரப்பர் ஆராய்ச்சி மையம் அமைக்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசியாவிலேயே தரம்வாய்ந்த இரப்பர் கிடைப்பது கன்னியாகுமரி மாவட்டத்தில்தான். மொத்த இரப்பர் உற்பத்தியில் கேரள மாநிலம் மற்றும் குமரி மாவட்டம் ஆகியவை 70 சதவிகிதம்

உற்பத்தி செய்கின்றன, 30 சதவிகிதம் மட்டுமே மற்ற நாடுகள் உற்பத்தி செய்கின்றன. இரப்பர் உற்பத்தி அதிகரிப்பு என்பது வேலைவாய்ப்புக்கும், விவசாயிகளுடைய வாழ்வாதாரத்திற்கும், அன்னியச் செலாவணி உருவாக்குவதற்கும் என பல வடிவங்களில் பயன்படுகிறது. M.R.F. Tyres இந்த இரப்பரினால் தயார் செய்யப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டு, முன்னாள் ஜனாதிபதி அவர்கள் 414, 417, 420 என்ற புதிய இரப்பர் இனங்களை அறிமுகப்படுத்தியுள்ளார். ஆகவே, அதிக உற்பத்தி தரக்கூடிய புதிய இன இரப்பர் உருவாக்கப்பட்டு, விரிவுபடுத்தி, இரப்பர் ஆராய்ச்சி மையம் அமைப்பது காலத்தின் கட்டாயமாக இருக்கின்றது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் ஏ.வி. பெல்லார்மின் அவர்களுடைய முயற்சியால் மத்திய அரசிடமிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கு 2 கோடி ரூபாய் கிடைக்கப்பெற்றது. அதற்காக 115 ஏக்கர் நிலமும் கேட்கப்பட்டது. கீரிப்பாறை அருகில் தல்லக்குளம், பொன்மனை கிராமம் உட்பட பல்வேறு பகுதிகளில் அரசினுடைய புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களைக் கையகப்படுத்தி இரப்பர் ஆராய்ச்சி மையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வாரா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கன்னியாகுமரி மாவட்டத்திலே இரப்பர் உற்பத்தி இருக்கின்றது. ஆனால், அதைவிட கேரள மாநிலத்திலே இரப்பர் உற்பத்தி அதிகமாக இருக்கின்ற காரணத்தாலே, மத்திய அரசின் சார்பாக, அந்த வாரியத்தின் சார்பாக, இரப்பர் ஆராய்ச்சி மையம் கோட்டயத்திலே இயங்கி வருகிறது. அதுபோக, அவர் குறிப்பிட்டதைப்போல, நாடாளுமன்ற உறுப்பினர் கேட்ட வேண்டுகோளின்படி இங்கே 100 ஏக்கர் நிலம் கிடைக்குமேயானால், கோட்டயத்திலே இருக்கிற மத்திய இரப்பர் வாரியம் இங்கே ஆராய்ச்சி மையம் அமைக்க முன்வந்துள்ளது. எனவே, வருவாய்த் துறையிலிருந்து அந்த நிலம் கிடைக்குமேயானால், இரப்பர் ஆராய்ச்சி மையம் அங்கே அமைக்கப்படும்.

2010 மே 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், சுருக்கமாகக் கேளுங்கள்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே என்னுடைய தொகுதிக்கு அருகில் இருக்கக்கூடிய வேலிமலைப் பக்கத்தில் 115 ஏக்கர் அரசுப் புறம்போக்கு நிலம் இருக்கின்றது என்று முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இரப்பர் போர்டுக்குப் பரிந்துரை செய்திருக்கின்றார்கள். எனவே, அந்தப் பகுதியில் அந்த இரப்பர் ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய அரசு இரப்பர் கழகத்திற்குச் சொந்தமான 5,000 எக்டர் நிலப் பரப்பளவு என்பது 4,250 எக்டராகச் சுருங்கி வருகின்றது. இந்தியாவுக்கு ஒன்றே முக்கால் இலட்சம் டன் இரப்பர் பற்றாக்குறை வருகிறது. இந்தப் பற்றாக்குறையைத் தவிர்க்க, இரப்பர் அதிகமாக உற்பத்தியாகக்கூடிய தமிழகத்தில் இரப்பர் உற்பத்தியைப் பெருக்க தமிழக அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் போகிறது என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இரப்பர் கழகம் 1-10-84-இலே நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்டு துவங்கப்பட்டு, அது வனத் துறையிடமிருந்து 4,279.78 எக்டர் நிலத்தைக் குத்தகைக்குப் பெற்றது. அங்கிருக்கின்ற முதிர்ந்த, பால் வடிகின்ற மரங்கள் இருக்கின்ற பகுதிக்கு 3,000 ரூபாய் குத்தகை என்றும், மற்ற இடங்களுக்கு 400 ரூபாய் ஒரு எக்டருக்கு என்றும் குத்தகை செலுத்தி அதைப் பெற்றிருக்கிறது. அவை முதிர்ந்த மரங்களாக இருக்கின்ற காரணத்தாலே, இப்போது பால் வடிவது குறைந்திருக்கிறது. இரப்பர் பால் உற்பத்தியை அதிகம் செய்வதற்காக நாங்கள் 1,100 எக்டர் நிலத்திலே இன்னும் ஐந்தாண்டு காலத்திலே புதுப்பித்து, புதிய நடவுகள் செய்து, இரப்பர் உற்பத்தியை அதிகப்படுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

திரு. அ. ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் காடுகளில், குறிப்பாக குமரி மாவட்ட வனப் பகுதிகளில் கோடிக்கணக்கான மரங்கள் காற்றிலும், மழையிலும் விழுந்து கிடக்கின்றன. தொடர்ந்து பல ஆண்டுகளாக அவை அங்கேயே கிடப்பதால் மரங்கள் நாசமாகிக் கொண்டிருக்கின்றன. அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி, அந்த மரங்களை வன மண்டியில் கொண்டு வந்து ஏலம் விட்டு, பொது மக்களுக்குக் கொடுக்க முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி இரப்பர் பற்றியது. (குறுக்கீடு) நீங்கள், வெட்டிய மரத்தைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் சரணாலயப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருந்தது. சரணாலயப் பகுதிகளில் மரங்கள் வெட்டவோ அல்லது காற்றில் விழுந்த மரங்களை அங்கிருந்து அப்புறப்படுத்தவோ கூடாது என்பது விதி. எனவே, அந்த வகையிலே காற்றிலே விழுந்த மரமென்றாலும் அந்தப் பகுதியிலிருந்து எடுக்க முடியாது. அதே நிலையிலே இருந்து அவை அழிந்தாலும், மரங்களுக்கு உரமாக மாறுமென்கின்ற காரணத்தால், இதுவரை அவற்றை அகற்றுகின்ற எண்ணம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

149—

கட்டடம்

***107890—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலை ஒன்றியத்தில் வாய்ப்பாடி புதூர் சத்துணவுக் கூடத்திற்கு கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?